


**எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???**

**இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளை வலையமைப்பினைக் கொண்டுள்ளதுடன் தனித்துவம் மற்றும் பெறுபேற்று திறமைகளுடன் முன்னனுபவத்தினையுடைய விண்ணப்பதாரியிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.**

# பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரியின் பிரத்தியேக உதவியாளர்

## அடிப்படை தேவைப்பாடுகள்

1. க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
2. க.பொ.த உயர் தர பரீட்சையில் மூன்று சித்திகளுடன் (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
3. செயலாளர் கருமங்கள் மற்றும் வழிமுறைகள் தொடர்பில் தகுதியிருத்தல் வேண்டும் (டிப்ளோமா அல்லது சான்றிதழ் மட்டத்தில்)
4. கணினி அறிவு மற்றும் சிறந்த ஆங்கில மொழித் தொடர்பாடல் திறமையுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
5. வங்கி அல்லது நிதிப்பிரிவில் செயலாளர் கருமங்களில் குறைந்தபட்சம் 15 வருடங்களிலான முழுமையாக கடமை முன்னனுபவம்.
6. வயது 55 வருடங்களுக்கு உட்பட்டிருத்தல்.

## சேவை நிபந்தனைகள்

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் வங்கி உதவியாளர் 5-III தரத்தின் கீழ் 01 வருட தகுதி காண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

வங்கி திருப்தி கொள்ளும் விதத்தில் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துகொண்டு தகுதி காண் காலத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்துகொண்ட பின்னர் அபேட்சகர் அத்தரத்தின் கீழ் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியின் பிரத்தியேக உதவியாளர் (PA) தரத்திற்கு நிரந்தர ஊழியராக பணியமர்த்தப்படுவார்.

இப்பதவி நிலையானது வங்கிச் சேவையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான எனினும் சாதாரண வங்கித்துறைக்கு மேலதிகமாக மூடிய சேவைக்குரிய (**Closed Service**) தரமாகும்.

## பிரதிபயன்கள்

பொருத்தமான விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பள பொதியானது பெற்றுக் கொடுக்கப்படும்.

## விண்ணப்பிக்கக்கூடிய இறுதித் திகதி

2025 டிசெம்பர் மாதம் 09ம் திகதி

## விண்ணப்பிக்கும் முறை

பூர்த்தி செய்யப்பட்ட தங்களது முழுமையான சுயவிபரக் கோவையினை உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் தொடர்பு விபரங்களுடன் விடய பரப்பில் (subject) விண்ணப்பிக்கும் பதவி நிலையினை குறிப்பிட்டு மேற்கூறிய விண்ணப்ப இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் **careers@rdb.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். சிறுபட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகத் தேர்விற்கு அழைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பினை ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் வங்கிக்கே உரியது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank


பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk |